<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 12.11.2025</td></tr>
<tr><td colspan="2">CC.No. 109/2023</td></tr>
<tr><td colspan="2">சாட்சி : PW1</td></tr>
<tr><td>பெயர் : திருமதி. ராணி</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு. ஆறுமுகம்</td><td>தொழில் : கூலி வேலை</td></tr>
<tr><td>கிராமம் : வையம்பட்டி</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : 37/2025</td></tr>
<tr><td colspan="2">( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் )</td></tr>
</table>

-----------------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். 1ம் எதிரி எனது கணவர். 2ம் எதிரி எனது அக்கா. 17 வருடங்களுக்கு முன்பு எனக்கும், 1ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. எனக்கு 3 ஆண் குழந்தைகள். 3 வது மகனுக்கு புற்றுநோய் உள்ளது. அவருக்கு 15 வயதாகிறது. எனது குழந்தைகள் என்னுடன் வசித்து வருகிறார்கள். எங்களது திருமணத்திற்கு பின்பு வீரமலைப்பட்டியில் வசித்து வந்தோம். 3 வது மகனுக்கு புற்று நோய் இருந்ததால் வையம்பட்டிக்கு குடும்பத்தோடு வந்தோம். வாடகை வீட்டில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம். எனது கணவர் ஜாதகம் பார்த்து மாதம் ரூ.30,000/- சம்பாதிப்பார். அந்த சமயத்தில் எனது அக்காவான 2ம் எதிரி எனது குழந்தைகளை பார்ப்பதற்காக அடிக்கடி எனது வீட்டிற்கு வருவார். அப்போது அவர்கள் இருவருக்கும் தவறான உறவு ஏற்பட ஆரம்பித்தது. அது சம்மந்தமாக நான் எனது கணவரை கண்டித்தேன். நீ என்ன சொல்றது புண்டமகளே நான் அப்படி தான் அவளிடம் போவேன் என்று சொல்லி எனது முடியை இழுத்து அடித்து துன்புறுத்தினார். பின்பு எனது மாமனார், மாமியாரிடம் அது பற்றி சொன்னேன். அவர்கள் கூப்பிட்டு எனது கணவரை கண்டித்தார்கள். நான் அப்படித்தான் 2ம் எதிரியிடம் இருப்பேன் என்று சொல்லி எனது மாமனார், மாமியார் பேச்சை கேட்கவில்லை. இது சம்மந்தமாக எனது தம்பி மற்றும் அம்மா, அப்பாவிடம் சொன்னேன். எனது அப்பா ஊரில் உள்ள சாமிநாதன், ராஜ்குமார், சக்திவேல் ஆகியோர்களை அழைத்து கூப்பிட்டு கூட்டம் போட்டு எதிரிகளை

அழைத்து பேசினார்கள். அந்த கூட்டத்தில் எனது கணவர் நான் இனிமேல் சரியாக நடந்து கொள்வேன் எனது மனைவி, குடும்பத்தை பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். 10 நாள்கள் மட்டும் என்னுடன் வந்து இருந்து கொண்டு மீண்டும் எனது கணவர் 2ம் எதிரியுடன் தொடர்பில் இருந்தார். மீண்டும் என்னை அடித்து மறுபடியும் அடித்து துன்புறுத்தினார். எனது சேலை முந்தானை இழுத்து எனது கழுத்தோடு இறுக்கி தூக்கில் போடுவதாக சொன்னார். நீ சாவடி நான் 2ம் எதிரியோடு தான் இருப்பேன் என்று சொன்னாதர். பக்கத்தில் இருந்த எங்களது வீட்டின் உரிமையாளர் அஞ்சலை தேவி வந்து தடுத்தார். அதன்பின்பு எனது தம்பிக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அதன்பின்னர் வையம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல்நிலையத்தில் எனது மனைவியுடன் வாழ்ந்து கொள்கிறேன் என்று எழுதி கொடுத்துவிட்டு வந்து பின்னர் நான் பீரோவிற்குள் வைத்திருந்த அரை பவுன் தாலி, காசு, குண்டு எல்லாம் சேர்த்து மூக்கால் பவுன், தோடு மூக்கால் பவுன், குழாய் 2 பவுன், செயின் 3 பவுன் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு 2ம் எதிரியுடன் சென்றுவிட்டார். கொஞ்ச நாட்கள் அவர் ஆள் காணவில்லை. பின்னர் புகையிலைப்பட்டியில் வசிப்பதாக தகவல் வந்தது. 18.03.2023 அன்று நானும், எனது மாமியார் காளியம்மாள், எனது அப்பா செல்வராஜ், எனது தம்பி ராஜ்குமார், உறவினரான சாமிநாதன் ஆகியோர்களுடன் புகலைப்பட்டிக்கு காலை 10.00 மணிக்கு எதிரிகளை பார்க்க சென்றோம். அப்போது எதிரிகள் இருவரும் வீட்டிற்குள் இருந்தார்கள். அப்போது எனது நகையை எதிரிகளிடம் கொடுக்க சொல்லி கேட்ட போது இருவரும் சேர்ந்து என்னை அடித்துவிட்டார்கள். மறுநாள் என்னுடன் வந்தவர்கள் என்னிடம் நீங்கள் நடவடிக்கை எடுத்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் நான் மகளிர் காவல்நிலையத்தில் 25.03.2021 அன்று புகார் கொடுத்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ், எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதி, நேரம் தெரியுமா என்றால் 18.03.2021 ம் தேதி காலை 10.00 மணியிருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் என்றால் சரிதான். அந்த புகாரில் தேதி 25.03.2021, இடம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு அவ்வளவாக படிக்க தெரியாது ஓரளவிற்கு தான் படிக்க தெரியும். நான் கொடுத்த புகாரே இது இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த புகாரை யார் சொன்னது என்றால் நான் சொல்ல சொல்ல கம்பியூட்டர் சென்டரில் தயார் செய்து காவல்நிலையத்தில் வந்து கொடுத்தேன். புகாரில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன் என்றால் ஆமாம்.

3. காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கும் போது என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் எனது மாமியார் காளியம்மாள், எனது அப்பா செல்வராஜ், ராஜ்குமார் எனது தம்பி, மயில்வாகன் ஆகியோர்கள் என்னுடன் வந்தார்கள். புகார் கொடுத்த அன்றே எனக்கு மனு ரசீது வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. நான் சொன்ன தேதியில் 25.03.2021 ல் எனக்கு மனு ரசீது வழங்கப்பட்டது என்றால் ஆமாம். 1ம் எதிரி எனது கணவர் என்றால் ஆமாம். 2ம் எதிரி எனது உடன் பிறந்த அக்கா என்றால் ஆமாம். எனக்கு திருமணமாகி 17 வருடங்களாகிறது. எனது திருமணத்திற்கு முன்பு எனது அக்காவை திண்டுக்கல்லில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஆமாம். நான் 10 வயது இருக்கும் போது எனது அக்காவிற்கு திருமணம் ஆகிவிட்டது. எனக்கு 3 குழந்தைகள் உள்ளார்கள் என்றால் ஆமாம். 3 குழந்தைகள் எனக்கு பிறக்கும் வரைக்கும் எனது கணவர் என்னுடன் சந்தோஷமாகத்தான் இருந்தார் என்றால் ஆமாம்.

4. எவ்வளவு நாள் எனது கணவர் என்னுடன் சந்தோஷமாக இருந்தார் என்றால் 6 வருடம் வரை சந்தோஷமாக இருந்தார். எனது கணவர் ஜாதகம் தொழில் பார்த்து வருகிறார் என்றால் ஆமாம். எனது கணவர் வீட்டை விட்டு காலை 06.00 மணிக்கு கிளம்பி இரவு 11.00 மணிக்கு தான் வருவார் என்றால் சரிதான் . எனது கணவருக்கும், எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு எவ்வளவு ஆண்டுகளாகிறது என்றால் 10 ஆண்டுகளாகிறது. அந்த 10 வருடமும் நானும், எனது கணவரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். கருத்து வேறுபாட்டை யார் யார் வந்த பஞ்சாயத்து செய்தார்கள் என்றால் ராஜ்குமார், ஊர்நாட்டாமை சக்திவேல் பஞ்சாயத்து செய்தோம். 2 முறை பஞ்சாயத்து செய்தோம். தேதி, மாதம், வருடங்கள் ஞாபகமுள்ளதா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் 10 வருடங்கள் ஒன்றாக குடும்பம் நடத்திவருகிறேன் என்று சொன்னால் நான் பத்து வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன்.

5. எனது நகையை எனது கணவர் எடுத்து சென்றுவிட்டார் என்று சொல்வதற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் வையம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அங்கு நடவடிக்கை எடுத்தார்களா மனு ரசீதை கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் எனது குடும்பத்தை பார்த்துக்கொள்கிறேன் என்று எனது கணவர் சொன்னதால் அவர்கள் பேசி அனுப்பிவைத்துவிட்டார்கள். கொஞ்சும் நாள் என்னுடன் வாழ்ந்தார் பின்பு எனது கணவர் 2ம் எதிரியுடன் சென்றுவிட்டார். எனது கணவர் மீது சட்ட நடவடிக்கை

ஏதாவது எடுத்தேனா என்றால்  மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால்  ஞாபகமில்லை.  வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால் தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குடும்பத்தில் பிரச்சனைகள் இருந்து வந்த நிலையில் தேதி, மாதம், வருடம் ஞாபகம் வைத்து கொள்ளமுடியவில்லை.

6. எனது நகைக்கு உண்டான ரசீது, பில் காவல்நிலையத்தில் நான் கொடுத்தேனா என்றால்   அந்த பில் 1ம் எதிரியிடம் உள்ளது அதனால் நான் கொடுக்கவில்லை. ரசீது, பில்களை நான் காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் 1ம் எதிரியிடம் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.  நான் கொடுத்த புகாரில் யார் யார் என்னென்ன கெட்ட வார்த்தைகள் சொல்லி அடித்தார்கள், திட்டினார்கள், துன்புறுத்தினார்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால்  அடித்தது உண்மை.  அவர் பச்சை பச்சையாக சொல்லி அடித்த  வார்தைகளை சொல்ல வேண்டும் என்றால் சொல்கிறேன்.  எனது புகாரில் குறிப்பிட்டு என்னென்ன கெட்ட வார்த்தைகள் திட்டினார்கள், யார் யார் திட்டினார்கள் என்று எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்  சரியல்ல.

7. இந்த வழக்கில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகளில் 2ம் சாட்சி எனது மாமியார் காளியம்மாள், 3ம் சாட்சி மயில்வாகன்  எனது மாமனார் அவர் இறந்துவிட்டார், 4ம் சாட்சி ராஜ்குமார் எனது தம்பி, 5ம் சாட்சி செல்வராஜ் எனது அப்பா, 6ம் சாட்சி சாமிநாதன் எனது ஒன்னுவிட்ட  அண்ணன் ஆவார், 7ம் சாட்சி சுப்பிரமணியன் ஊர்நாட்டாமை, பஞ்சாயத்து செய்தவர், 8ம் சாட்சி சக்திவேல் ஊர்நாட்டாமை ஆகியோர்கள் எல்லாம் எனது ஊர்க்காரர்கள், உறவினர்கள் என்றால்  அப்படி எல்லாம் இல்லை.  மேற்படி நபர்கள் எனக்கு ஊர்க்காரர்கள், உறவினர்களையும் வைத்து எனக்கு சாதகமாக பயன்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல.  நான் சொல்வது போன்று 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் எந்தவிதமான தகாத உறவுகள் இல்லை என்றால் சரியல்ல.  1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் ஏற்பட்ட தகாத உறவு குறித்து எனது மாமனார், மாமியார் கண்டித்தார்கள் என்பது குறித்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியும், 2ம் எதிரியும்  என்னை எந்தவிதமான ஆபாசமான வார்த்தைகளால் திட்டவில்லை என்றும், அடிக்கவில்லை, துன்புறுத்தவில்லை என்றும், வரதட்சணை வன்கொடுமை செய்யவில்லை என்றும், எனக்க கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.  எனது கணவர் மீது மகளிர் காவல்நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்தேன் என்றால் ஒரு முறை கொடுத்தேன்.   இது சம்மந்தமாக வையம்பட்டி  காவல்நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்துள்ளேன் என்றால் இரண்டு முறை கொடுத்துள்ளேன். அந்த இரண்டு முறையும் எங்களை சமாதானம் படுத்தி அனுப்பி வைத்தார்கள் என்றால் ஆமாம்.

8. சம்பவம் நடந்ததாக சொல்லும் 18.03.2021 ம் தேதி அன்று 2ம் எதிரி வீட்டில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். 2ம் எதிரியின் வீடு திண்டுக்கல் மாவட்டம், சாரணப்பட்டி யுனியன், புகையிலைப்பட்டி வீட்டின் முன்பு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். அங்கு பிரச்சனையாகி சம்பவம் பற்றி திண்டுக்கல் மாவட்டத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்கின்ற தேதி, மாதம், வருடம், இடம் ஆகியவை திண்டுக்கல் மாவட்டம் என்பதால் அதனுடைய அதிகார ஆள்வரை எல்லைக்குட்பட்ட காவல்நிலையத்தில் புகார் கொடுக்காமல் நானும், எனது சகோதரர், எனது அப்பாவுடன் சேர்ந்து எங்களது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது ஒரு பொய்யான புகாரை ஜோடித்து அதற்கு வழக்கு பதிவு செய்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 18.03.2021 ம் தேதி சம்பவம் நடந்ததாக உள்ள சமயத்தில் 6 நாள்கள் தாமதமாக சென்று மணப்பாறை மகளிர் காவல்நிலையத்தில் தாமதமாக புகார் கொடுத்தற்கு என்ன காரணம் என்றால் வையம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால் அதில் 1ம் எதிரி ஓடிவிட்டார். அதன்பின்பு சாரணப்பட்டி காவல்நிலையத்தில் 1ம் எதிரியும், 2ம் எதிரியம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. காவல்நிலைய அதிகாரி என்னையும், எனது குடும்பத்தாரையும் அழைத்து பாத்திரம், பண்டம் ஏற்றி சென்றது தவறு என்று சொன்னார்கள், நீங்கள் சமாதானமாக செல்லுங்கள் என்று அங்கு அனுப்பி வைத்தார்கள். நான் சொல்லும் காலதாமதம் தவறு என்றும் இந்த வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால் அதிலிருந்து தப்பிப்பதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும் உண்மையிலியே சம்பவம் நடைபெற்று இருந்தால் நான் திண்டுக்கல் மாவட்டத்தில் மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் மணப்பாறை மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு எனது கணவர் எனக்கும், எனது குழந்தைகளுக்கும் அத்திவாசியமான உணவு, உடை, இருப்பிடத்திற்கு தேவையான உதவிகளை செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் மீது ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவும் எனக்கு வேறு ஒரு நபருடன் கள்ள உறவு இருப்பதால் அதனை சாதகமாக பயன்படுத்தி 1ம் எதிரி மீதும், 2ம் எதிரி மீதும் சந்தேகம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், எனக்கும், எனது கணவருக்கும் எந்தவிதமான பிரச்சனையும் ஏற்படவில்லை என்றும் நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக மிகைப்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. என்னுடனும் எனது

குழந்தையுடன் சேர்ந்து வாழ எனது கணவர் தயாராக இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.